I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.68/2021</u> <u>நாள் : 02.03.2026</u>

<u>பி.சா.1– திரு. செந்தூர்பாண்டி.</u>

குறுக்கு விசாரணை :–

நீதிமன்ற ஆணையர் இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் சொத்துக்களை அளந்தார் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 வரைபடத்தில் உள்ளவாறு சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் நீ.ம.சா.ஆ வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியும். பி.சா.ஆ 7 ஆவணம் எங்களுக்கு கிரையம் செய்த நபர்களின் பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். அதில் புல எண் 332/1பி இடம்பெறவில்லை என்றால் நான் அதை படித்து பார்க்கவில்லை. அந்த பத்திரத்தை நாங்கள் கிரையம் பெறும்போதும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவும், வழக்கு தாக்கல் செய்த பின்னரும் நான் படித்து பார்க்கவில்லை. பி.சா.ஆ 7ல் புல எண் 333/1பி மட்டும்தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண் 333 தாவா சொத்துக்களுக்கு வடபுறம் இருப்பதாக நீ.ம.சா.ஆ 3ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ 8 ஆவணம் எனக்கு கிரையம் செய்து கொடுத்த சேர்மன் மால் மனைவி ஜெயக்குமாரி பெயரில் உள்ள கிரைய பத்திரம் அசல் என்றால் சரிதான். வா.சா.ஆ 8ல் வா.சா.ஆ 7 பாக பிரிவினை பத்திரம் பற்றி எந்த வாசகமும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். ஆனால் அதில் தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளார். பி.சா.ஆ 8 பத்திரத்திலும் புல எண் 333/1பி பற்றிதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பாக சொத்தை அளக்கவில்லை. நான்கு பக்கமும் கல் போட்டு கொடுத்தார்கள்.

அளக்காமல்தான் கல்போட்டுக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். சொத்தை அளந்தால்தான் நான்கு பக்கமும் கல் போட்டது சரியா, இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ 8 ல் பாலசிங் என்பவரின் சொத்து வடபுறமாக மாலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீசா.ஆ 2 ல் C புள்ளி முதல் T வரையில் உள்ள பகுதி தேவாலயத்தின் காம்பவுண்ட் சுவர் என்றால் சரிதான். ஆனால் பி.சா.ஆ 8 ல் சொத்தின் வடபுறமாக மேற்படி காம்பவுண்ட் சுவர் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி காம்பவுண்ட் சுவர் 2011 அல்லது 2012 ல் கட்டப்பட்டது. அதற்கு முன்பாக மேற்படி காம்பவுண்ட் சுவர் தற்போது காம்பவுண்ட் சுவர் உள்ள இடத்திற்கும் வடபுறமாக இருந்தது என்றால் சரிதான். அந்த தேவாலயம் பெயர் அபிஷேகநாதர் தேவாலயம் என்றால் சரிதான்.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.02 17:55:19 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.